TORONTO Public Health — Immunization Update

# பள்ளித் தடுப்பூசி கிளினிக்குகளில் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் ஒப்புதல்

***ஆகஸ்ட் 2019***

*ஜூன் TDSB வாரியக் கூட்டத்தில் அறிவித்தபடி, தடுப்பூசிக் கொள்கையில் டொராண்டோ பப்ளிக் ஹெல்த் (Toronto Public Health) ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இது 2019-20 பள்ளி ஆண்டில் நடைமுறைக்கு வருகிறது.*

*மேல்நிலைப் பள்ளிகளில் நடத்தப்படும் டொராண்டோ பப்ளிக் ஹெல்த் கிளினிக்குகளில் 14 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதிலுள்ள மாணவர்களால் தடுப்பூசிகளைப் பெற ஒப்புதலளிக்க முடியும். இந்த மாற்றத்திற்கு குறிப்பிட்ட சில காரணங்கள் உள்ளன:*

- *திடீர் நோய்ப் பரவலின்போது பதிலளிப்பதற்கு, உரிய நேரத்தில் தடுப்பூசி போடுதல். வடஅமெரிக்காவில் அம்மை நோய் பரவி வருகிறது. உயர் தடுப்பூசி விகிதங்கள், அதன் பரவலைத் தடுத்து, கட்டுப்படுத்தும்.*

- *தற்போது தடுப்பூசிகளுக்கு ஒப்புக் கொண்டிருக்கும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு TPH சமூகத் தடுப்பூசி கிளினிக்குகளில் தற்போதைய நடைமுறையைச் சீரமைத்தல்.*

- *மாணவர்களின் இடைநீக்கங்களைக் குறைத்தல். 2017/18 பள்ளியாண்டில் இன்றைய தேதி வரையிலான தடுப்பூசிகளை எடுத்துக்கொள்ளாததன் காரணமாக 4,500 TDSB மாணவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பள்ளி வருகைக்குத் தேவையான தடுப்பூசிகளை மாணவர்கள் மிக எளிதாக அணுகச் செய்வது, இடைநீக்கங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும்.*

- *முதல் நிலைப் பராமரிப்பாளர் இல்லாத அல்லது மருத்துவக் காப்பீடு இல்லாத குடும்பங்களுக்கு ஆதரவளித்தல்.*

**முடிவெடுக்கும் செயல்பாட்டில் நீங்கள் உள்ளடக்கப்படுவதை உறுதிப்படுத்த உங்கள் குழந்தையின் பள்ளியில் கிளினிக்குகள் ஏற்பாடு செய்வதற்கு முன்பு பெற்றோருக்கு அறிவிக்கப்படும். கிளினிக் வருவதற்கு முன்னர் உங்கள் குழந்தை மற்றும் நலப் பராமரிப்பு வழங்குநருடன் பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாட உங்களுக்கு நேரம் கிடைக்கும். மாணவர்கள் ஒருபோதும் தடுப்பூசிக்குக் கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள்.**

தடுப்பூசி போடுவதற்கு முன்பு ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் டொராண்டோ பப்ளிக் ஹெல்த் செவிலியர்கள் தகவலறிந்த ஒப்புதலைப் பெறுவார்கள். இதில் பின்வருவன அடங்கும்:

- தங்களின் பெற்றோருடன் தடுப்பூசி குறித்து கலந்துரையாடிவிட்டீர்களா என்று மாணவர்களிடம் கேட்டல். கிளினிக்கில் இருக்கும் போது உள்பட எந்த இடத்திலும் தடுப்பூசி குறித்து தங்களின் பெற்றோர்களுடன் கலந்துரையாட மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.
- தாங்கள் பெறவுள்ள தடுப்பூசியின் நன்மைகள் மற்றும் இடர்களைப் புரிந்துகொண்டனரா என்று அறிதல்.
- ஏதேனும் கேள்விகள் உள்ளதா என்று மாணவர்களிடம் கேட்டல்.

*பள்ளியில் மாணவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதே இதன் இலக்கு ஆகும். பிற GTA பள்ளி வாரியங்கள் மற்றும் Health Care Consent Act ஆகியவற்றில் ஏற்கனவே உள்ள நடைமுறையுடன் இந்த மாற்றம் இணக்கமாயுள்ளது. ஒப்புதலைப் பெறுவதற்கு சட்டப்பூர்வ வயது ஏதும் ஒண்டாரியோவில் கிடையாது.*

*கேள்விகள் எவையும் இருந்தால், டொராண்டோ பப்ளிக் ஹெல்த்தை 416-392-1250 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.*